தேவாரம் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்
ஆணையிடுபவர். திரு. கா. பாலசுப்ரமணியன்

ந.க. எண். 79/2024 நாள் : 07.11.2024

பொருள்: மனைப்பிரிவு – தேனி மாவட்டம் – தேவாரம் பேரூராட்சி – தேவாரம் கிராம சர்வே எண்.924/1A2ல் அமையும் 3683 ச.மீ பரப்பளவில் மனைப்பிரிவுகள் அனுமதி வேண்டியது – தொழில்நுட்ப அனுமதி வழங்கியது – இறுதி ஒப்புதல் வழங்கி ஆணையிடுதல் – சார்பு.

பார்வை: 1) மனுதாரர் திரு.ஜி.சிவப்பிரகாசம், எஸ்.பாரதி கடிதம் நாள்.22.05.2024.

2) தேவாரம் சார்பதிவக ஆவணம் எண்.2339/2023 நாள்.09.08.2023

3) தேனி மாவட்ட நகர் ஊரமைப்பு துறை துணை இயக்குநரது ந.க. எண். THENI/36HRL3B8/2023/TCP2/2023/TCP Dt.16.08.2023.

4) இதே எண்ணிட்ட இவ்வலுவலக கடிதம் நாள். 14.05.2024 (தேவாரம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது).

5) சார்பதிவாளர், தேவாரம் அவர்களின் கடித ந.க.எண்.88/2024 நாள்.20/05/2024.

6) தேவாரம் பேரூராட்சி மன்ற முன் அனுமதி நாள்.22.05.2024

*

****

உத்தரவு :–

தேனி மாவட்டம், தேவாரம் பேரூராட்சி பகுதி தேவாரம் கிராமம் சர்வே எண்.924/1A2ல் அமையும் 3683 ச.மீ இடத்தை மனைப்பிரிவுகளாக பிரித்து விற்பனை செய்ய உள்ளதாகவும், மேற்படி மனைப்பிரிவு விற்பனை செய்வதற்கு உரிய அங்கீகாரம் வேண்டி, திரு.ஜி.சிவப்பிரகாசம், எஸ்.பாரதி என்பவர் பார்வை 2 ல் காணும் விபரப்படி விண்ணப்பித்ததன்பேரில், மனுதாரர்களின் விண்ணப்பத்தை பரிசீலனை செய்து பார்வையில் காணும் தேனி, நகர் ஊரமைப்பு துறை துணை இயக்குநரர் அவர்களின் செயலாணைக் கடிதத்தின் வாயிலாக 3683 ச.மீ நிலப்பரப்பிற்கு குடியிருப்பு மனைப்பிரிவு அனுமதி கோரியது தொடர்பாக உத்தேச சாலையை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்து, மனைப்பிரிவு சாலையினை தார்ச்சாலை (Block Topping) தன்மை கொண்டு அமைத்து அதன் புகைப்பட நகல், உள்ளாட்சி தீர்மானம், தானபத்திர நகல், (நோட்டரி அத்தாட்சியுடன்) மற்றும் வில்லங்கச் சான்றிதழ் அசல் அனுப்பி வைக்கும்படி தெரிவிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து பார்வையில் காணும் இவ்வலுவலக கடிதத்தின்படி மனுதாரர் குறிப்பிட்டுள்ள மனைப்பிரிவுக்கான உத்தேச சாலைக்கான பாதையை சார்பதிவாளர் அலுவலகத்தின் மூலம் தானமாக ஒப்படைப்பு செய்து மற்றும் அடிப்படை வசதிகள் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டதின் அடிப்படையில் பார்வையில் காணும் மனுதாரரால் தேவாரம் பத்திரபதிவு அலுவலக ஆவண எண்.2339/2023 நாள்.09.08.2023-ன்படி பாதைக்கான இடத்தினை பதிவுசெய்யப்பட்டு மனைப்பிரிவுதாரரால் பேரூராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்படும்.

அதனை தொடர்ந்து மனைப்பிரிவுதாரரால் முடிக்கப்பட்ட பணிகளை பார்வையில் காணும் இவ்வலுவலக கடிதத்தின் மூலம் ஆய்வு மேற்கொண்டு அறிக்கை சமர்பிக்க தெரிவிக்கப்பட்டதில் தேவாரம் பேரூராட்சி இளநிலைப் பொறியாளரால் (த.இ) ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, பார்வையில் காணும் கடிதத்தின்படி பணியின் தரத்திற்கான சான்று மற்றும் முடிவு அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார். மேலும், இம்மனைப்பிரிவு சாலை, வடிகால் மற்றும் சோலார் அமைக்கப்பட்டுள்ளது.

அதன்படி இம்மனைபிரிவு அங்கீகாரம் கோரப்பட்டுள்ள 3683 ச.மீ இடத்திற்கு பார்வையில் காணும் நகர் ஊரமைப்பு துறை துணை இயக்குநர், தேனி அவர்களால் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்ட தொழில்நுட்ப அனுமதியின் அடிப்படையிலும் இதில் கண்ட மனைப்பிரிவிற்கு கூர்ந்தாய்வு கட்டணம் மற்றும் மனைப்பிரிவு முறைப்படுத்துதல் கட்டணம் செ.சீ.எண்.490/2024 நாள்.07.11.2024இன் படி ரூ.15000/– செலுத்தப்பட்டுள்ளது.

மேலும் பார்வையில் காணும் இவ்வலுவலக கடிதத்தின் மூலம் அரசு வழிகாட்டி மதிப்பின்படி நிலப்பயன் மாற்று கட்டணம் தெரிவிக்க வேண்டியதில், பார்வையில் காணும் சார்பதிவாளர், தேவாரம் வழிகாட்டி மதிப்பின்படி நிலப்பயன் மாற்று கட்டணம் 3 % சதவீத தொகை ரூ.5460/– கருவூலக செலுத்துச் சீட்டு எண்.20240801009735 நாள்.01.08.2024–இன்படி உரிய அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

செ.சீ.எண்.490/2024–2025 நாள்.07.10.2024இன் படி விண்ணப்பக் கட்டணம் ரூ.1000, கூர்ந்தாய்வுக் கட்டணம் ரூ.1000, மனைப்பிரிவு ஒன்றிற்கு ரூ.1000 வீதம் 13 மனைப்பிரிவிற்கு மொத்தம் ரூ.13000 ஆக மொத்தம் ரூ.13000 தேவாரம் பேரூராட்சிக்கு செலுத்தப்பட்டுள்ளது.

பார்வையில் காணும் தேவாரம் பேரூராட்சி மன்ற முன்அனுமதியின்படியும், நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், தேனி மாவட்டம் அவர்களின் தொழில்நுட்ப அனுமதி ந.க.எண் THENI/36HRL3B8/2023/TCP2/2023/TCP Dt.16.08.2023 மனைப்பிரிவு நிபந்தனைகளின்படியும் இறுதி ஒப்புதல் அங்கீகாரம் அளிக்கப்படுகிறது.

மேலும், மனைப்பிரிவு அனுமதி வழங்கப்பட்ட நாளிலிருந்து காலியிடவரி வசூலிக்கப்படும் என்ற நிபந்தனைகளுடன் இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

செயல் அலுவலர்,
தேவாரம் தேர்வுநிலை பேரூராட்சி
தேனி மாவட்டம்.

இணைப்பு:- மனைப்பிரிவு வரைப்படம் மற்றும் நிபந்தனைகள்.

பெறுநர்:–

திரு. ஜி.சிவப்பிரகாசம், எஸ்.பாரதி
வார்டு 12 தெற்குத் தெரு,
தேவாரம், தேனி மாவட்டம்.

நகல் :–

1. தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தேனி அவர்களுக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.
2. துணை இயக்குநர், நகர் ஊரமைப்பு துறை, தேனி மாவட்டம் அவர்களின் தகவலுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
   சார்பதிவாளர், தேவாரம் அவர்கள் தகவலுக்காக.